Literacy for a Billion

Movie: Anantha Poongatre
Year: 1999

Song: Senmeena
Lyricist: Vairamuthu

செம்மீனா விண்மீனா
செம்மீனா விண்மீனா
கண்ணோடு வாழும் கலைமானா
இல்லை கண் தோன்றி
மறையும் பொய்மானா
கண்ணிரண்டும்
இமைக்கும் சிலைதானா
என் கனவுக்குள்
அடிக்கும் அலைதானா
வெண்ணிலாவின் தீவா
அவள் வெள்ளை பூவா
கம்பன் காளிதாசன் சொன்ன
காதல் தேனா
செம்மீனா விண்மீனா
செம்மீனா விண்மீனா

இருளை பின்னிய குழலோ
இருவிழிகள் நிலவின் நிழலோ
பொன் உதடுகளின்
சிறு வரியில்
என் உயிரை புதைப்பாளோ
ரவிவர்மன் தூரிகை எழுத்தோ
இல்லை சங்கில் ஊறிய கழுத்தோ
அதில் ஒற்றை வேர்வை துளியாய்
நான் உருண்டிட மாட்டேனோ
பூமி கொண்ட பூவை எல்லாம்
இரு பங்காய் செய்தது
யார் செயலோ
சின்ன ஓவிய சிற்றிடையோ
அவள் சேலை கட்டிய
சிறு புயலோ
என் பெண்பாவை
கொண்ட பொன் கால்கள்
அவை மன்மத தோட்டத்து
மரகத தூண்கள்

செம்மீனா விண்மீனா
செம்மீனா விண்மீனா

அவளே என் துணையானால்
என் ஆவியை
உடையாய் நெய்வேன்
அவள் மேனியில்
உடையாய் தழுவி
பல மெல்ய
இடம் தொடுவேன்
மார்கழி மாதத்து இரவில்
என் மாங்கனி
குளிர்கிற பொழுதில்
என் சுவாசம்
தருகின்ற சூட்டை
என் சுந்தரிக்கு
பரிசளிப்பேன்
மோகம் தீர்க்கும் முதரவில்
ஒரு மேகமெத்தை
நான் தருவேன்
மாதம் இரண்டில்
மசக்கை வந்தால்
ஒரு மாந்தோப்பு
பரிசளிப்பேன்
அவள் நடந்தாலோ
இடை அதிர்ந்தாலோ
குழல் உதிர்க்கின்ற பூவுக்கும்
பூஜைகள் புரிவேன்
செம்மீனா விண்மீனா
செம்மீனா விண்மீனா
கண்ணோடு வாழும் கலைமானா
இல்லை கண் தோன்றி
மறையும் பொய்மானா
கண்ணிரண்டும்
இமைக்கும் சிலைதானா

Literacy for a Billion

என் கனவுக்குள் காதல் தேனா
அடிக்கும் அலைதானா செம்மீனா விண்மீனா
வெண்ணிலாவின் தீவா செம்மீனா விண்மீனா
அவள் வெள்ளை பூவா செம்மீனா விண்மீனா
கம்பன் காளிதாசன் சொன்ன செம்மீனா விண்மீனா

*Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.*

*PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.*